**செயற் பொறியாளர் (வே.பொ), நந்தனம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: திரு. கோ.சுப்ரமணியன், எம்.டெக்**

**செ.மு.ஆணை.எண்.அ / 743 /2019** **நாள்: 26–08–2019**

பொருள்: நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4–ல் அடங்கிய பணிகள் – நேரடி போட்டித் தேர்வு – 2015–16, 2016–17 மற்றும் 2017–18–ம் ஆண்டில் தட்டச்சர் பதவியில் பணியாளர் சேர்ந்து கொண்டது– பணி வரன் முறை செய்து– ஆணையிடல் குறித்து.

பார்வை
1) செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.1012/PSD-G2/2019, நாள் 20.02.2019 மற்றும் 27.02.2019.
2) சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பமே) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிப5/139388/2018, நாள் 05.03.2019.
3) சென்னை, நந்தனம், தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அப2/8448/2019, நாள் 08.03.2019.
4) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அ/74212019, நாள் 08.03.2019.
5) வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் அபபி3/23567/2019, நாள்.20.07.2019.
6) தலைமைப் பொறியாளர் (வே.பொ) , சென்னை, நந்தனம், அவர்களின் கடித எண்.அப2/8448/2019, நாள் 14.08.2019.

••••••••

**ஆணை**

பார்வை-1 முதல் 6ல் காணும் உத்தரவுகளின்படி 2015-2016, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டில் தொகுதி-IVல் அடங்கிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் போட்டி தேர்வின் வழியாக தேர்வு செய்யப்பட்டு தட்டச்சராகப் பணியில் சேர்ந்துக் கொண்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக பார்வை-5 மற்றும் 6–ல் காணும் கடிதங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்டவாறு பணி நியமனம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் தட்டச்சராக பணியில் சேர்ந்துக் கொண்ட பின்வரும் தட்டச்சரின் பணியினை பின்வருமாறு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | தட்டச்சரின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.ஜி.குமார் | 18.03.2019 முப | 18.03.2019 முப |

இப்பணிவரன்முறை ஆணை கீழ்காணும் நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட்டது.
"This regularization is subject of the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination IV for the year 2015-2016, 2016-17 & 2017-18 recruitment"

இப்பணியாளரை பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

செயற்பொறியாளர் (வே.பொ)
நந்தனம், சென்னை–35.
26/8/2019

பெறுநர்
திரு.ஜி.குமார், தட்டச்சர், இவ்வலுவலகம்.
நகல் - வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது,
நகல் - தலைமைப்பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் - கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் – 'அ' பிரிவு இவ்வலுகம் (துனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)